# நவகத்தேகம பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 29 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நவகத்தேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் போது ஆரம்பித்திருந்த குடிநீர் செயற்திட்டம் ஒன்றிற்க நன்கொடை ஒன்றாக வழங்கியிருந்த நீர் சுத்திகரித்தல் மற்றும் இலக்ரோட துப்பரவு செய்யும் இயந்திரத்தின் பெறுமதியாகிய ரூபா 1,042,000 தொகையினை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி அமைச்சில் இருந்து நன்கொடை ஒன்றாகக் கிடைத்திருந்த போடோன் டிபர் வண்டியின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(இ) ரூபா 656,842 பெறுமதியான கொங்கிரீட் அச்சுக்கள் உற்பத்தி நிலையத்தின் பெறுமதியினை நிலையான சொத்து ஒன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தெயட்ட கிருள அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் 2014 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைக்காக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 160,000 இற்கான மூலதன உதவியினை கணக்குகளில் இருந்து

கைவிடுபட்டமையால் அப் பெறுமதியினால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோருக்கு ஏற்படும் தாக்கங்களும் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதியாகக் காணப்பட்ட 05 வகையான குழாய் கிணறு உபகரங்களில் 44 விடயங்கள் மற்றும் 02 வகையான மின் உபகரணங்களை 38 விடயங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) பெருந் தெருக்கள் அமைச்சில் இருந்து 2013 ஆண்டின் போது பெற்றிருந்த ரூபா 8,483,971 தொகைக்கான மூலதன உதவி கடன்பட்டோருக்கு பதிலீடு செய்யப்பட்டமையால் அப் பெறுமதியால் வருடாந்தத்திற்கான மிகை மற்றும் கடன்பட்டோர் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) கொங்கிரீட் அச்சுக்கற்களின் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 625,600 தொகை நடைமுறைச் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்படாமையால் அத் தொகையால் நடைமுறை சொத்துக்கள் மற்றும் மிகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,388,339 ஆகும். 03 வருடங்களை விட மிகையான காலம் அறவிடப்படாமல் காணப்பட்ட நிலுவை வாடகை வருமானம் ரூபா 21,000 ஆக காணப்பட்டதுடன் ரூபா 8.483,972 இற்கான வருமானம் கடன்பட்டோர் மீதி பெருந் தெருக்கள் அமைச்சில் இருந்து ஆண்டின் போது கிடைத்திருந்த போதிலும், பிழையற்ற முறையில் கணக்கீடு செய்யப்படாமையால் மீதியாக காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் வெளிசாராருக்கு செலுத்த வேண்டியிருந்த கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 6,246,895 தொகையாகும்.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட பதவியணிக் கடன் முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,626,410 ஆக காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 33,686,228 இற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2104 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,215,036 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 845,516 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 39,954,010 உம் மற்றும் ரூபா 13,079,469 உம் மூலதன உதவி மற்றும் ரூபா 26,348,370 உம் மற்றும் ரூபா 13,920,775 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் மீளாய்வாண்டிற்காக ரூபா 10,390,604 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,686,822 ஆக மாறியதால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 12,077,426 இற்கான முன்னேற்றமொன்று காணக்கூடியதாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பிடப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வாடகை | 1,557 | 814 | 743 | 1,687 | 720 | 967 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 125 | 55 | 70 | 141 | 100 | 41 |
| நீதி மன்றத் தண்டப் பணம் | 2,040 | 776 | 1,264 | 2,436 | 2,042 | 394 |
| ஏனையவை | 2,887 | 396 | 2,491 | 2,083 | 507 | 1,576 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது வருமானம் சேகரித்தல், மதிப்பீட்டு வருமானத்தில் நூற்றிற்கு 53 ஆக காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டின் போது நூற்றிற்கு 31 இற்கான பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தமையால் நூற்றிற்கு 22 இற்கான பின்னடைவு ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் இடையே முரண்கள் நூற்றிற்கு 47 ஆகும். மற்றும் நூற்றிற்கு 69 ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மிகை மதிப்பீடு ஒன்று ஏற்பட்டிருந்தது.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

2014 ஆகஸ்ட் முதல் 2014 திசெம்பர் வரை புத்தளம் நீதிவான் நீதிமன்றில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 388,207 இற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் முன்னைய ஆண்டு மே மாதம் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை வடமேல் மாகாண சபையில் இருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொங்கிரீட் அச்சுக் கற்கள் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 700,000 இற்கான மூலதனம் ஒன்று சபை நிதியத்தில் இருந்து ஈடுபடுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதும், அதற்காக சபை நிதியத்தில் இருந்து வழங்கிய பங்களிப்பத் தொகை நூற்றிற்கு 67 எனும் ரூபா 471,728 தொகை மாத்திரமே.

(ஆ) பல வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 21,000 கட்டிட வாடகை வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) சபை போதியளவு வருமான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை அமுல் நடத்துதல் அல்லது புதிய வருமானம் உருவாக்கும் வழிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் ஒன்று காணப்படவில்லை.

(ஈ) அகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான சபையின் மதிப்பீட்டு மூலதனச் செலவு ரூபா 80 மில்லியனாகக் காணப்பட்டது. உள்ளவாறான செலவு 26 மில்லியன் ரூபாவாகும். அதன் பிரகாரம் முரண்கள் மில்லியன் ரூபா 54 ஆகும். அதாவது மூலதனச் செலவுகள் நூற்றிற்கு 67 இனால் மிகை மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபாட்டு பௌதீக வளங்கள்

---

சபைக்குச் சொந்தமான ரூபா 332,500 பெறுமதியான மினி குபோட்டோ டிரக்டர் மற்றும் டெய்லர் என்பன 10 வருடங்களை மிகைத்த காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.3 மனித வள முகாமைத்துவம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பு 49 ஆகக் காணப்பட்டதுடன், அதனது உள்ளவாறான எண்ணிக்கை 52 ஆக காணப்பட்டது. இரண்டு வகையான பதவிகளில் 11 ஊழியர்களுக்கான மிகையும் மூன்று வகையான பதவிகளில் ஊழியர்கள் 08 பேரினது மிகையொன்று காணப்பட்டது.

(ஆ) பல வருட காலமாக சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப் பதவியில் பதில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர் ( வருமான மேம்படுத்தல்) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை 07 எனினும் அலுவலர்கள் 07 பேரின் மிகை ஒன்று காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்